**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**சூன் – 2019**

**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழ் மொழிக் குறித்து பிங்கல நிகண்டு கூறுவது என்ன?
2. புறத்திணைகள் எத்தனை? அவை யாவை?
3. பாணர்களின் பற்கள் தேய்ந்ததற்குக் காரணம் என்ன?
4. இற்செறிப்பு என்றால் என்ன?
5. ஐம்படைத்தாலியில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள் யாவை?
6. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
7. புல்லினது ஆயர் என்போர் யார்?
8. திருக்குறளில் கைக்கிளையை வெளிப்படுத்தும் குறட்பாக்களுள் ஒன்றினைக் கூறுக.
9. பாரதியார் சிலப்பதிகாரத்தை எவ்வாறு போற்றுகிறார்?
10. சிந்தாமணி என்றால் என்ன?
11. பெரியபுராணம் உணர்த்தும் கருத்து யாது?
12. பாரதிதாசன் இயற்றிய மூன்று காவியங்கள் யாவை?
13. வாணிதாசனின் படைப்புகள் வெளியான இதழ்களுள் இரண்டினைக் கூறுக?
14. மாங்கனியின் காதலன் யார்?

15. நிலத்தினும் பெரிதே எனும் பாடலை பாடியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. சங்க இலக்கியத்தை அறிந்து கொள்ள தொல்காப்பியம் துணை புரிவது குறித்து இயம்புக.
2. சோழன் கிள்ளிவளவன் குறித்து கோவூர்கிழார் கூறுவனவற்றை எழுதுக.
3. 'கூடல் இழைத்தல்' என்பதை சான்று காட்டி விளக்குக.
4. குறிஞ்சிப் பாடல்களில் காணப்படும் உள்ளுறை ஒன்றைக் கூறி விளக்குக.
5. பெருங்காப்பியத்துக்குரிய இலக்கணத்தை எழுதுக.
6. குகனின் உயரிய பண்புகளை இயம்புக.
7. மானுடர் வாழ்வு குறித்து சூளாமணி கூறுவதை விவரிக்க.
8. வீரத்தாய் மூலம் பாரதிதாசன் வெளிப்படுத்தும் பொதுவுடைமைக் கொள்கைகளைக் கூறுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்க இலக்கியத்தில் மருதத்திணைப் பாடல்களின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அகத்திணைப் பாகுபாட்டுக் கோட்பாட்டை விளக்கியுரைக்க.

2. (அ) சேரர்களின் வீரம், கொடைத்திறம் குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதை நிகழ்வுகளை விளக்கியுரைக்க.

3. (அ) பாஞ்சாலி சபதத்தைப் பாரதியார் படைத்துள்ள விதம் குறித்து ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) வாணிதாசனின் 'தமிழச்சி', 'கொடிமுல்லை' முன் வைக்கும் சமுதாய சீர்த்திருத்தக் கருத்துக்களை விளக்கியுரைக்க.

*** 